**முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்**

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,
முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
2025 ம் வருடம் நவம்பர் மாதம் 13 ம்நாள் வியாழக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056-ஸ்ரீ விசுவாவசு வருடம்-ஐப்பசி திங்கள் 27 ம்நாள்)

**இடைநிலை மனு எண்.1/2025**
**அசல் வழக்கு எண்.456/2024**

சசிகலா. .. மனுதாரர்/பிரதிவாதி

// எதிர் //

ஏ.வினோத்குமார் .. எதிர்மனுதாரர்/வாதி

17.12.2024 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 11 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, வழக்குரையை நிராகரிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 05.11.2025 ம்தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.ஆர்.சுரேஷ், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.கே.முபாரக் பாட்சா, வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**உத்தரவு**

வழக்குரையை நிராகரிக்க வேண்டுமென்று கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனு உரையின் சுருக்கம்:**

மனுதாரர் வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுதாரர் அவதூறு செய்ததாக எதிர்மனுதாரர்/வாதி ரூ.12,00,000/-ஐ இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் ஊஞ்சலூர் பஞ்சாயத்து தலைவர். ஊஞ்சலூர் பஞ்சாயத்தில் கவுன்சிலராக 5 வது வார்டுக்கு தேர்வு செய்யப்பட்ட பிறகு நல்லெண்ணத்தின் பேரில் பஞ்சாயத்து தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்மனுதாரர் ஊஞ்சலூரில் குடியிருக்கிறார். எதிர்மனுதாரர் பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பணிபுரிந்தார். மேற்படி திட்டம் 02.10.2020 ல்

பிரதம மந்திரியால் புதுடெல்லியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அதன் முழு நோக்கம் நாடு முழுவதும் தூய்மை பணியை மேற்கொள்வதாகும். இந்த எதிர்மனுதாரர் மேற்படி தூய்மை திட்டத்தின்கீழ் ஏ.கே.எம். என்ற தனியார் ஏஜென்சியின் கீழ் பணிபுரிந்தார். பின்னிட்டு தமிழ்நாட்டில் அரசு மாறியதில் மேற்படி திட்டம் மற்றொரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டதால் எதிர்மனுதாரர் மேற்படி வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மனுதாரர் தற்போதைய ஆளும்கட்சியின் உறுப்பினர்.

3. எதிர்மனுதாரர் எதிர்கட்சியின் உறுப்பினர். ஆகவே இருவருக்கும் இடையே முன் விரோதம் இருந்தது. மேற்படி திட்டத்தின் விளம்பரதாரராக பணியாற்றியபோது எதிர்மனுதாரர் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்குவதாக கூறி விளம்பரம் செய்து பொது மக்களிடமிருந்து தொகை பெற்று மோசடி செய்துவிட்டார். அதனைப் பொறுத்து பொதுமக்களில் ஒருவரான ஊஞ்சலூரை சேர்ந்த கலில் அகமது, குள்ளக்கவுண்டன்புதுரை சேர்ந்த முகமது மினாஜ், காசிபாளையத்தை ஜெகதீஸ் ஆகியோர் புகார் கொடுத்ததின் பேரில் கொடுமுடி காவல் ஆய்வாளரிடம் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மனுதாரர் கோரியதன் பேரில் போலீசார் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுத்ததால், எதிர்மனுதாரர் மேற்படி தொகைகளை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார். அதனால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டது. அதனைப் பொறுத்து இந்த மனுதாரர் 28.07.2023 ம்தேதி எதிர்மனுதாரர் மீது காவல் துறையில் புகார் கொடுத்தார். மேற்படி புகாரைப் பெற்றுக் கொண்டு சி.எஸ்.ஆர். நெ.122/2023 கொடுக்கப்பட்டது.

4. ஊஞ்சலூர் அருள்மிகு மாடப்பசாமி கோவில் எதிர்மனுதாரருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் குலதெய்வ கோவில். மேற்படி கோவில் நிர்வாகத்தில் எதிர்மனுதாரருக்கும், அவரது உறவினர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் எதிர்மனுதாரர் அரசுத்துறை அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்து அவரது உறவினர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தினார். மேற்படி சட்ட விரோதமான செயலினால் எதிர்மனுதாரருக்கும், அவரது உறவினர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மனுதாரர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால், எதிர்மனுதாரர் மனுதாரரின் விருப்பத்திற்கு மாறாக செயல்படுகிறார். எதிர்மனுதாரர் ஒரு நாகலட்சுமி, மணிவண்ணன் ஆகிய குடும்ப உறுப்பினர்களைத் தாக்கியதில் அவர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேரணை மனு எண்.36357 மற்றும் 36417/2023 ஐ தாக்கல் செய்து மேற்படி மனுக்கள் முடிவடைந்துவிட்டது.

5. கொடுமுடி தாலூக்கா, ஊஞ்சலூர் மாடசாமி வீதியில் வசித்து வரும் மகுடபதி மனைவி மகாலட்சுமிக்கு ஊஞ்சலூர் நத்தம் கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது. அந்தச் சொத்துக்கள் பேரில் மகாலட்சுமி மகுடபதி, பிரோம்குமார், மனோஜ்குமார், சாந்தினி, கிருத்திகா மற்றும் எதிர்மனுதாரர் மீது அ.வ.எண்.289/2024 என்ற வழக்கை கொடுமுடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கில் மகாலட்சுமி தரப்பில் எதிர்மனுதாரர் அவருக்குத் தெரியாமலேயே அவரது சொத்துக்கள் முழுவதையும் மோசடியாக அபகரித்து கொண்டதாகவும் அதனடிப்படையில் அ.வ.எண்.84/2020 என்ற வழக்கை கொடுமுடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாக கூறி அந்த வழக்கில் விளம்புகைப் பரிகாரம் கேட்டதில் மேற்படி வழக்கில் சமரச தீர்ப்பாணை ஏற்பட்டு அது பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் இல்லாநிலையது, சட்டப்படியானதல்ல, மகாலட்சுமியை கட்டுப்படுத்தாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர் மீது அ.வ.எண்.289/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்படி சொத்தில் எவ்வித கட்டிடமும் கட்டக்கூடாது என்றும் இயற்கை அம்சங்களை மாற்றக்கூடாது என்றும் கோரியிருந்தார். எதிர்மனுதாரர் பொது இடத்தில் தன் பெயரை அவதூறு செய்துள்ளார். அதனைப் பொறுத்து 11.07.2023 தேதியில் எதிர்மனுதாரரை எச்சரித்து அவதூறு செய்யக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கு எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. மேலும் எதிர்மனுதாரர் வாட்ஸ்அப்பிலும், அம்மா எக்ஸ்பிரசிலும் மனுதாரரைக் குறித்து அவதுறு செய்துள்ளார். மேற்படி அறிவிப்பு அனுப்பியும் அதைப் பெற்றுக் கொள்ளாமல் மறுத்து விட்டதால் மேற்படி அறிவிப்பு தபால் திருப்பப்பட்டது. இந்த மனுதாரர் பஞ்சாயத்து தலைவி என்பதாலும், பெண் என்பதாலும் அதைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர்மனுதாரர் மனுதாரரின் நலனுக்கு எதிராக செயல்படுகிறார். மேலும் எதிர்மனுதாரர் நாளிதழில் அறிவிப்பும் வட்டார செய்தியாளர்களிடமும் மனுதாரரின் பெயரைக் கெடுக்கும் எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார். எதிர்மனுதாரர் 13.02.2024 ல் அனுப்பிய அறிவிப்பிற்கு இந்த மனுதாரரால் 02.02.2024 தேதியில் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பிராதில் எவ்வித குற்றச்சாட்டுரையும் சொல்லப்படவில்லை. எதிர்மனுதாரரின் சட்டப்படியான உரிமை எதுவும் மீறப்படவில்லை. ஆகவே இவ்வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் உடையவரல்ல. ஏற்கனவே உள்ள முன் விரோதம் காரணமாக இந்த வழக்கை வியாஜ்ஜியமூலம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளார். இந்தச் சூழ்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் பிராதை நீக்கரவு செய்யக் கோரி மனுதாரர்

இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

6. **<u>எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>-**

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது யாதெனில், இந்த எதிர்மனுதாரர் கடந்த செப்டம்பர் மாதம் 2017 முதல் டிசம்பர் மாதம் 2021 வரை பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்பார்வையாளராக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் என்ற நிதி நிறுவனத்தின் மூலம் ஊஞ்சலூர் பேரூராட்சியில் ஒப்பந்த பணியாளராக பணியாற்றி வந்தார். கடந்த 2021 சட்டமன்ற தேர்தலுக்கு பின்னர் ஆட்சி மாற்றம் செய்யப்பட்டதால் ஒப்பந்தம் வேறு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதால் இந்த எதிர்மனுதாரர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

7. எதிர்மனுதாரர் குலதெய்வமான ஊஞ்சலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.08-ல் அருள்மிகு மாடப்பசுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. மூன்றாம் நபர்களான நாகலட்சுமி மற்றும் மணிவண்ணன் ஆகியோர் பேரூராட்சி தெரு பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி கொண்டு சுவாமி வழிபாடு செய்ய இடையூறு செய்து வந்தனர். அதனால் எதிர்மனுதாரர் இந்த ஆக்கிரப்புகளை அகற்றிட வேண்டி 26.02.2023 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கும். கொடுமுடி வருவாய் வட்டாச்சியருக்கும், ஊஞ்சலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கும் புகார் மனு அளித்தார். தலைவர் பதவியேற்ற மனுதாரர் இந்த எதிர்மனுதாரர் அளித்த புகார் மனு குறித்தும் மேலும் எதிர்மனுதாரர் பேரூராட்சியில் பணியாற்றிய காலத்தில் ஆதாரமின்றி ஊழல் செய்ததாகவும் எதிர்மனுதாரரைப் பற்றி அவதூறு பேச்சுகளை தொடர்ந்து ஊஞ்சலூர் பேரூராட்சியில் பகுதிக்கு உட்பட்ட செல்வராஜ் என்பவரிடம் தொலைபேசி வழியாக 11.05.2023 அன்று பரப்பி வந்துள்ளார்.

8. எதிர்மனுதாரரைப் பற்றி 11.05.2023 அன்று பேசிய ஆடியோ பதிவினை மையமாக கொண்டு ஈரோடு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் மனுதாரர் மீது அ.வ.எண்.456/2024 என்ற அவதூறு வழக்கை 05.06.2024 தேதியில் இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். தற்போது வழக்கு விசாரணையில் கடந்த 07.01.2025 அன்று மனுதாரர் அவதூறு பேசியபின் 11.05.2023 அன்று பேசிய அவதூறு பேச்சிற்கு பதில்

அறிக்கையாக 28.07.2023 அன்று பின்தேதியிட்ட மனு ரசீதை கொடுமுடி காவல் நிலையத்தில் பதியப்பட்ட பொய் புகாருக்கான ஆதாரங்களாக சமர்பித்துள்ளார். எதிர்மனுதாரர், பேரூராட்சியிலிருந்து பணியில் விடுவிக்கப்பட்ட பின் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பொது மக்களாகிய கலில் அகமது, முகமது மினாஜ், ஜெகதீஸ், மஞ்சுளா ஆகியோரிடம் எதிர்மனுதாரர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இலவச வீடு வாங்கித் தருவதாகவும் இதற்காக ரூ.50,000/- செலுத்த வேண்டுமென்றும் முதல் தவணையாக ரூ.10,000/- செலுத்த வேண்டுமென்றும் கூறி ஏமாற்றியதாகவும், கலில் அகமதுவிடம் 21.07.2022 அன்றும், முகமது மினாஜிடம் 25.07.2023 அன்றும், ஜெகதீஸ்யிடம் 28.07.2023 அன்றும், மஞ்சுளா தேவியிடம் 30.07.2023 அன்றும் பொய் புகாரினை தான் பேரூராட்சியில் தலைவர் பதவியில் இருப்பதால் எதிர்மனுதாரரை பழிவாங்கும் நோக்கத்துடன் அவர்களை மிரட்டி எழுதி வாங்கி கொண்டு அதனை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எதிர்மனுதாரர் பெயரில் புகார் அளித்துள்ளார். எதிர்மனுதாரர் அவதூறு செய்தபின் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட பொய் புகார்கள் ஆகும்.

9. மேற்படி புகார் மனுவிற்கு (CSR.122/23) கொடுமுடி காவல் துறையினரால் 31.07.2023 அன்று விசாரணை மேற்கொள்ளபட்டு மனுதாரர் நேரில் ஆஜராகி மனுதாரரிடம் எந்த ஒரு ஊழலும் செய்யவில்லை என்றும் தாங்களே விருப்பட்டு இப்பணியினை வழங்கியதாகவும், பணியிலிருந்து விடுபட்டு பொருளாதார இழப்பீட்டில் இருப்பதால் இதனை வழி செல்விற்கு அளித்ததாகவும், திரும்ப பணத்தை பெற்று கொண்டு புகார்களை திரும்ப பெற்று கொள்வதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளனர். ஆகவே, எதிர்மனுதாரர் எந்த ஒரு மோசடியும் செய்யவில்லை என்று மேற்படி மனு மீது எந்த ஒரு மேல் நடவடிக்கையும் இல்லாமல் கைவிடப்பட்டது.

10. எதிர்மனுதாரரின் தாத்தா காலம் சென்ற தன்னாசி பிள்ளை என்பவரின் பூர்வீக சொத்துகளான ஊஞ்சலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட வ.எண்.07 எண்.96 ஈரோடு மெயின்ரோடு பகுதியில் அமைந்துள்ள 495-1/2 சதுரடி இடத்தில் உள்ள கட்டிடத்தையும், வார்டு எண்.08 எண்.3, மாடப்பசுவாமி கோவிலில் பகுதியில் உள்ள சுமார் 549 சதுரடி இடத்தில் உள்ள கட்டிடத்தையும் எதிர்மனுதாரர் முறையாக கொடுமுடி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் சொத்தின் வாரிசுதாரர்களான மகுடபதி, பிரேம்குமார், மனோஜ்குமார், சாந்தினி, அன்பரசு, கிருத்திகா ஆகியோருக்கு பங்கு தொகையினை அளித்து நீதிமன்ற உத்தரவின் பேரில் அ.வ.எண்.84/2020 ல் ஆவணம் செய்துள்ளார். இதில் இந்த சொத்தின்

வாரிசே அல்லாத மகுடபதி மனைவி மகாலட்சுமி இந்த எதிர்மனுதாரரின் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரரின் தூண்டுதலால் மகுடபதி என்பவரை பிரதிவாதியாக கொண்டு வழக்கை ஈரோடு சார்பு நீதி மன்றத்தில் அ.வ.எண்.183/2024 என்ற வழக்கை தாக்கல் செய்தார். பின் இந்த வழக்கு கொடுமுடி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்த பொய் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிர்மனுதாரரின் இந்த பூர்வீக சொத்தினை மனுதாரர் மகாலட்சுமி என்பவர் மூலம் தன்னை ஏமாற்றி அபகரிக்க செய்த ஊழல் செயலாகும்.

**11.** மேலும், ஊஞ்சலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட எதிர்மனுதாரருடைய குல தெய்வ கோவிலான மாடப்பசுவாமி கோவிலை சுற்றி ஆக்கிரப்பு செய்த நாகலட்சுமி மற்றும் மணிவண்ணன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் பஞ்சாயத்து தெரு பகுதிக்கு உரிமம் வேண்டி வழக்கு தொடுத்தனர். இந்த எதிர்மனுதாரர் 02.02.2024 அன்று ஆக்கிரப்பை அகற்ற வேண்டி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இது தொடர்பாக விசாரணை செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியருக்கு உத்தரவு பிறப்பித்தது. இதனை விசாரணை செய்த வருவாய் கோட்டாட்சியர் கடந்த 15.03.2023 அன்று ஆக்கிரப்பை அகற்ற உத்தரவு பிறப்பித்தார். பின் ஆக்கிரப்பாளர்கள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தனர். வருவாய் அலுவலரும் ஆக்கிரப்பை அகற்ற 12.06.2024 அன்று உத்தரவு பிறப்பித்தார். பின்னர் ஆக்கிரப்பாளர்கள் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் உறுத்துக் கட்டளை கோரி அ.வ.எண்.188/2024 என்ற வழக்கை தாக்கல் செய்தனர். இறுதியாக எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தற்போது வழக்கு விசாரணையும் உள்ள காரணத்தால் ஊஞ்சலூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆக்கிரப்புகளை அகற்றி கொண்டு உள்ளார். மனுதாரர் இந்த ஆக்கிரப்பாளர்களை நாகலட்சுமி, மணிவண்ணன் ஆகியோருக்கு சாதகமாக அலுவலக தகவல்களைக் கொண்டு அரசு அதிகாரிகளைப பணி மேற்கொள்ள விடாமல் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தனது பதவியின் மூலம் பல முறைகேடுகளையும் அரசுக்கு பல பொய் அறிக்கையும் செலுத்தி வந்த நிலையில் இதற்கான ஆதாரம் அனைத்தும் அவர் செல்வராஜ் என்பவரிடம் பேசிய ஆடியோ பதிவில் தெளிவாக உள்ளன.

**12.** கடந்த 11.07.2023 ல் மனுதாரர் மேற்கண்ட அனைத்து ஆதாரத்துடன் கூடிய உண்மை சம்பவங்களை மறைத்து சட்டத்தினை ஏமாற்றும் நோக்கத்துடன் எதிர்மனுதாரருக்கு பொய் அறிக்கைகள் கொண்ட வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார்.

அதற்கு இந்த எதிர்மனுதாரர் கடந்த 13.02.2024 ல் உண்மைச் சங்கதிகளைக் கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும் கடந்த 07.09.2023 அன்று அம்மா எக்ஸ்பிரஸ் நாளிதலும், பாரத எக்ஸ்பிரஸ் நாளிதலும், மனுதாரர் எதிர்மனுதாரரைப் பற்றி அவதுறு பேசியது தொடர்பாகவும், மனுதாரர் அதிகாரிகளை ஆக்கிரப்பினை அகற்ற அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி போலி அறிக்கையினை சமர்பித்ததும், எதிர்மனுதாரரைப் போன்ற சாமானியனை மிரட்டியதும், ஆக்கிரப்புதாரர்களுக்கு சாதகமாக செயல்பட்டதும் எதிர்மனுதாரருடைய வாழ்வாதாரத்தை சீர்குலையச் செய்த ஆடியோ பதிவுகளையும் தெளிவாக பத்திரிக்கை துறையினரால் தீவிர விசாரணை செய்யப்பட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளன. எனவே எதிர்மனுதாரரின் பதில் அறிக்கையை ஆய்வு செய்தும், மனுதாரரின் அனைத்து பொய் அறிக்கையும் ரத்து செய்து எதிர்மனுதாரரின் வாழ்வாதாரத்தை சீர்குலைய செய்த மனுதாரர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் விதமாக இந்த அவதூறு வழக்கிற்கு உரிய தீர்ப்பினை வழங்க வேண்டும். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

13. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் முன்னிடப் -படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

14. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

15. <u>பிரச்சினைக்குத் தீர்வு:-</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், வாதி தூய்மைப்பணித் திட்டத்தின்கீழ் பணிபுரிந்ததில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், வாதி பொதுமக்களிடமிருந்து ரூ.30,000/- வீடு கட்டி தருவதாகக் கூறி ஏமாற்றி மோசடி செய்துவிட்டதாகவும், அதன்பேரில் இந்த மனுதாரர் புகார் கொடுத்ததாகவும், மேலும் அருள்மிகு மாடப்பசாமி கோவில் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் இந்த மனுதாரர் மீது எதிர்மனுதாரர்/வாதி பல புகார்களை அனுப்பி வைத்ததாகவும், எதிர்மனுதாரர் பொய்யான சங்கதிகளைக் கூறி அவருடைய பெயரை களங்கப்படுத்தி விட்டதாகக் கூறி இழப்பீடு கோரி தாக்கல் செய்திருக்கும் அசல் வழக்கு

சட்டப்படியானதல்ல என்றும், வழக்கிற்கு வியாஜ்ஜிய மூலம் ஏற்படவில்லை என்றும், ஆகவே, மேற்படி வழக்கை நிராகரிக்க வேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

16. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், மனுதாரர் ஊஞ்சலூர் பஞ்சாயத்து தலைவி என்றும், ஊஞ்சலூரில் உள்ள அருள்மிகு மாடப்பசாமி கோவிலைச் சுற்றி ஆக்கரமிப்பு செய்ததைக் குறித்து எதிர்மனுதாரர் புகார் அளித்ததில் மனுதாரர் எதிர்மனுதாரரைக் குறித்து தவறான செய்திகளை பரப்பி எதிர்மனுதாரரின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அதனைக் குறித்து காவல் ஆய்வாளர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு புகார்கள் அனுப்பியிருப்பதாகவும், அவர் அனுப்பிய புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரரின் தூண்டுதலின்பேரில மாடப்பசாமி கோவிலைச் சுற்றி ஆக்கிரமிப்பாளர்கள் கோவிலின் சொத்தை ஆக்கிரமிபபு செய்து வருவதாகவும், மனுதாரர் இந்த எதிர்மனுதாரரை அவதூறாக செய்தி பரப்பியதால் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

17. மனுதாரர் ஊஞ்சலூர் பஞ்சாயத்து தலைவி மற்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும் எதிர்னுதாரரர் மத்திய அரசின் தூய்மைப் பணித் திட்டத்தில் விளம்பரதாரராக பணிபுரிந்து மாநில அரசின் ஆட்சி மாற்றம் காரணமாக வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

18. மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் பொய்யானச் சங்கதிகளைக் கூறி பொய் புகார் கொடுத்து அசல் வழக்கைத் தாக்கல் செய்துவிட்டதாகவும் வழக்கிற்கு வியாஜ்ஜிய மூலம் இல்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்புச் சங்கதிகளைப் பொருத்து வழக்காவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே கோவில் நில ஆக்கிரமிப்பு சம்பந்தமான புகார்கள் மற்றும் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது பொதுமக்களிடம் வீடு கட்டி கொடுப்பதாக மோசடி செய்து பணம் பெற்றதாக புகார் கொடுக்கப்பட்டும் இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட விரோதம் காரணமாக புகார்கள் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் மேலும் வழக்கறிஞர் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

19. மனுதாரர் தரப்பில் வழக்கிற்கு வியாஜ்ஜிய மூலம் ஏற்படவில்லை என்று சொல்லப்பட்டிருப்பினும் பிராதில் மனுதாரர் ஒரு செல்வராஜ் என்பவரிடம் எதிர்மனுதாரரைப் பற்றி தவறாகப் பேசியதாகவும், மேற்படி செல்வராஜ் எதிர்மனுதாரரைச்

சந்தித்து இம்மனுதாரர் பேசிய விவரத்தை பதிவு செய்து காண்பித்ததாகவும், அதனைக் குறித்து புகார் கொடுத்ததாகவும், மனுதாரர் பொய்யான தகவல்களை பொதுமக்களிடம் கூறியதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

20. மனுதாரரர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், எதிர்மனுதாரர் மேற்படி பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட தூய்மைப்பணியில் இருந்து விடுவிக்கப்பட்டவர் என்பதாலும் இருவருக்குமிடையே கட்சி ரீதியாக பிரச்சினை உள்ளது என்பதும் மேலும் இருவரும் ஒருவர் மீது ஒருவர் புகார்கள் கொடுத்து அப்புகார்கள் விசாரணையில் உள்ள நிலையில் வழக்கிற்கு வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. உபயவாதிகளுக்கு இடையே உள்ள பிரச்சினைகள் மற்றும் வாதி தரப்பில் சொல்லப்படும் சங்கதிகள் குறித்து வழக்கு விசாரணையில்தான் முடிவு செய்ய இயலும். வாதி தரப்புச் சங்கதிகள் யாவும் question of facts என்பதால் மேற்படி பிராதை எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்க இயலாது.

21. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புகள் ம.சா.ஆ.1 முதல் 7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்புகளிலும் இருதரப்பிலும் உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக சொல்லப் -பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் 14 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதில் எதிர்மனுதாரர் மற்றும் ஒரு அன்பரசு ஆகியோர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்த புகார் மற்றும் நீதிப் பேராணை மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், வழக்கறிஞர் அறிவிப்புகள், கொடுமுடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அ.வ.எண்.84/2020 ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பினருக்கும் இடையே பிரச்சினை இருப்பதால் வழக்குமூலம் ஏற்பட்டுள்ளது.

22. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில்,

1) 2025 (1) CTC 631
2) 2023(5) CTC 571
3) 2023(6) CTC 19
4) 2025(5) CTC 60
5) 2025(2) CTC 573
6) 2025(3) CTC 619
7) 2025(4) CTC 690
8) 2025(2) CTC 857

என்ற முன தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டியிருப்பினும் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சங்கதிகள் வழக்கு விசாரணையின்போது உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தீர்மானிக்க இயலும் என்பதாலும் அசல் வழக்கிற்கு வியாஜ்ஜியமூலம் உள்ளதாலும் மனுவை அனுமதிக்க இயலாது என்பதால் மனு ஏற்புடையதல்ல என்று தீர்மானித்து மனுவைத் தள்ளுபடி செய்வதென இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இந்த மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ம் வருடம் நவம்பர் மாதம் 13 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL

Digitally signed by S EZHIL
Date: 2025.11.13 19:39:53 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

**சான்றாவணப் பட்டியல்**

**மனுதாரர் தரப்பில்**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.12.2020 | கொடுமுடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அ.வ. எண். 84/2020 ல் பிறப்பித்த சமரச இறுதிநிலை தீர்ப்பாணை. | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 11.07.2023 | மனுதாரர் வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதார -ருக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| ம.சா.ஆ.3 | 03.08.2023 | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள திருப்பப் -பட்ட கவர். | அசல் |
| ம.சா.ஆ.4 | 13.02.2024 | எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| ம.சா.ஆ.5 | 20.02.2024 | எதிர்மனுதாரருக்கும் அவருடைய வழக்கறிஞருக்கும் மனுதாரர் கொடுத்த பதில் அறிவிப்பு | நகல் |
| ம.சா.ஆ.6 | 22.02.2024 | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| ம.சா.ஆ.7 | 29.02.2024 | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள திருப்பப்பட்ட கவர். | அசல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பில்</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 26.02.2023 | எதிர்மனுதாரர் மற்றும் ஒரு அன்பரசு என்பவர் ஈரோடு மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு கொடுத்த புகார் | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 28.12.2023 | W.P.No.36375/2023 என்ற மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | பதிவிறக்க நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 28.12.2023 | W.P.No.36417/2023 என்ற மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | பதிவிறக்க நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 07.02.2024 | W.P.No.2678/2024 என்ற மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | பதிவிறக்க நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 13.02.2024 | எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.6 | -- | எதிர்மனுதாரரின் ஊழியர் அடையாள அட்டை. | நகல் |
| எ.ம.சா.ஆ.7 | 20.02.2024 | எதிர்மனுதாரருக்கும் அவருடைய வழக்கறிஞ -ருக்கும் மனுதாரர் கொடுத்த பதில் அறிவிப்பு. | நகல் |
| எ.ம.சா.ஆ.8 | – | கொடுமுடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.84/2020 ன் பிராது | நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 10.12.2024 | கொடுமுடி, சார்பு நீதிமன்றம் அ.வ. எண்.289/2024 ல் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை. | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.10 | 28.12.2023 | W.P.No.36417/2023 என்ற மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | பதிவிறக்க நகல் |
| எ.ம.சா.ஆ.11 | 07.02.2024 | W.P.No.2678/2024 என்ற மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு | பதிவிறக்க நகல் |
| எ.ம.சா.ஆ.12 | – | கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமை -யிடம் மற்றும் பொது தகவல் அலுவலர், ஈரோடு அவர்கள் வழங்கிய தகவல்கள் அடங்கிய கோப்புகள் | நகல் |
| எ.ம.சா.ஆ.13 | 13.02.2024 | எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.14 | 12.12.2020 | கொடுமுடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அ.வ. எண்.84/2020 ல் பிறப்பித்த சமரச இறுதிநிலை தீர்ப்பாணை. | ஜெராக்ஸ் நகல் |

**<u>சாட்சியப் பட்டியல்</u>**

**<u>மனுதாரர் தரப்பில்</u>**
(.. இல்லை ...)

**<u>எதிர்மனுதாரர் தரப்பில்</u>**
(.. இல்லை ...)

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2025.11.13 19:40:09 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.1/2025
அ.வ.எண்.456/2024
நாள் 13.11.2025
மு.கூ.மா.நீ.ம., ஈரோடு